16901

11722

உ

சிவமயம்

தென்கோவை

# பண்டிதர் ச. கந்தையாபிள்ளை

அவர்கள்

# ஞாபக வெளியீடு

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS-41

சுன்னுகம் :

கு. அம்பலவாணபிள்ளை

எழுதியது

1959

உ

சிவமயம்.

தென்கோவை

# பண்டிதர் ச. கந்தையாபிள்ளை

அவர்கள்

# ஞாபக வெளியீடு

சன்னுகம் :

**கு. அம்பலவாணபிள்ளை**

எழுதியது

1959

சுன்னாகம் :
திருமகள் அழுத்தகம்

# அணிந்துரை

தமிழ் மொழியை வரன்முறையாக நன்கு கற்றுத் தேறிய பண்டிதர்கள் யாழ்ப்பாணத்தில் ஒரு சிலரே யுளர். அவர்களே பழைய தமிழ் மரபினைப் பாதுகாத்து வருபவரெனலாம். அண்மையில் அவர்களில் இருவர் ஒருவர்பின் னொருவராக, கற்றோரும் மற்றோருந் துயரில் மூழ்க, அரனடி மேவினர். அவர்கள் முறையே வித்துவசிரோமணி பிரமஸ்ரீ சி. கணேசையரவர்க ளும், பண்டிதர் ச. கந்தையாபிள்ளை யு மாவார்கள். இவர்கள், கல்வி ஒழுக்கம் முதலியவற்றிலும் வயதிலும் மிக்க ஒற்றுமைப்பாடுடையவர்கள்; ஒரேயாசிரியரிடம் ஒருங்கு கற்றவர்கள்; நெருங்கிய நண்பர்கள்; ஒருவருக் கொருவர் உதவியாக வாழ்ந்தவர்கள். அடுத்தடுத்து, பத்துநாள் எல்லைக்குள் இவர்களைத் தமிழுலகம் இழக்க நேர்ந்தது புதுமையே யென்பாம்.

இவர்களுள் பண்டிதர் ச. கந்தையாபிள்ளையின் பிற்கால வாழ்க்கை, சமயத்துறையில் மிகவும் நெருங்கி ஈடுபடுவதாயிற்று. முத்தியின் விசேடங்களை எடுத் துரைத்துச் சமயத்துறையிற் பல உண்மைகளை விளக் கித் தாமும் அதில் ஈடுபடுவாராயினர். இவரின் சமயக் கொள்கையில் ஆர்வங்கொண்டு நெருங்கி யீடுபட்ட வேறு சிலருமுளர்.

யாவர்க்கும் பயன்படும்படி அவர் வாழ்க்கை வர லாற்றை எழுதும்படி அவருடைய நண்பர்களும் உறவினரும் என்னைப் பணித்தனர். பண்டித ரவர்களை நாற்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக நான் நன்கறிவேன். அத்துடன் அவரிடஞ் சில இலக்

கியங்களையும்,சிவஞானபோதம், சிவப்பிரகாசம் முதலிய சித்தாந்த நூல்களையும் கற்றதுண்டு. கைம்மாறு கருதாது அவர் செய்த உதவிக்கு நான் அவரின் வாழ்க்கை வரலாற்றை எழுத நேர்ந்தது ஒரு பேறென்றே கருதுகின்றேன். இவ் வரலாற்றில், நான் நேரே பண்டிதரைப்பற்றி யறிந்தன போக, மிகுதி அவரது உறவினரும் நண்பர்களும் உதவியனவாகும். உண்மை முத்தி விஷயமாக இந்நூலிற் கூறப்பட்ட சில பாகங்கள், பண்டிதருடன் சமய விஷயமாக நெருங்கிய தொடர்புடையராய்ப் பல விஷயங்களை அவரிடங் கேட்டறிந்த நண்பர்கள் சிலர் வழங்கியனவாகும்.

இச் சிறுநூல் வெளிவருவதில் மிக்க ஆர்வத்துடன் உழைத்தவர் பண்டிதரின் மைத்துனர் திரு. தி. சிவகுருநாதன் அவர்கள். பண்டிதரின் நிழலுருவப்படம் இதிலிடம்பெறுதற்குத் துணைபுரிந்தவர் அவர் சகோதரர் திரு. ச. வேலுப்பிள்ளையவர்கள். இவர்கள் இருவருக்கும் எமது மனமார்ந்த நன்றி யுடையதாக.

மொழித்துறையிலும் சமயத்துறையிலும் பண்டிதரடைந்துள்ள பெருநிலைகளை நன்கறிந்த இரு நண்பர்கள் அளித்துள்ள நினைவுப் பாக்கள் கடைசியிற் சேர்க்கப்பட்டுள்ளன. இவர்களுக்கும் எமது நன்றி யுடையதாக.

சுன்னாகம், இங்ஙனம்,
9-3-59. **கு. அம்பலவாணபிள்ளை.**



தென்கோவை

பண்டிதர் ச. கந்தையாபிள்ளை

1880 — 1958

உ

சிவமயம்

தென்கோவை

# பண்டிதர் ச. கந்தையாபிள்ளை

## தோற்றுவாய்

மலர்தலை யுலகம், மாபெரும் அறிஞர்களைத் தம்மாட் டுடைத்தாதல்பற்றித்தான் பெருங் கொந்தளிப்புகள், சேதங்கள், கலக்கங்கள் இடைவிடாது தோன்றியவிடத்தும் நிலைதளும்பித் தட்டழிந்து தடுமாறாது நிலைபெற்று வருகின்றது என்பாம். புராதன பெருமையும் பண்பாடும் நிறைந்த பாரதநாட்டுக்குச் சிரோரத்தினமாக விளங்குவது தமிழ்வழங்கும் தென்னாடென்பதை எவரும் இலகுவில் மறுக்கமாட்டார். அன்று தொட்டு இன்றுவரை மிக்க பேரறிஞர்களை, அவதாரபுருடர்களை, அருள்வள்ளல்களை யுடைத்தாய்த் திகழ்வது இத் தமிழ்நாடு. தாய்நாடுபோலச் சேய்நாடாகும் ஈழமும் தூய செந்தமிழ் பேசப்படும் நாடாகவும், நல்லிசைப் புலவர்களைக்கொண்ட நானிலமாகவும் திகழ்ந்துவருவது கண்கூடு. ஈழத்துப் பூதந்தேவனாரை முதற்கொண்டு எத்தனையோ கவிவாணர்கள், இலக்கண இலக்கிய வித்துவான்கள் நமது ஈழநாட்டில் வாழ்ந்து பெரும் புகழை நாட்டிச் சென்றனர். இவர்களின் நுண்ணறிவும் பரந்த நூற்பழக்கமும் தமிழிலக்கண விலக்கியப் பயிற்சியும் எத்துணைச் சிறப்புடைத்தாய் விளங்கினவென்பதை இவர்கள் நமக்கு அளித்துப்போன என்று மழியாச் செல்வங்களான பெருநூல்கள் காட்டிநிற்பனவன்றோ. நமது நாடாகும்

ஈழத்தில் இடைவிடாது உள்நாட்டரசியற் புரட்சிகளும், வேற்றுநாட்டரசினர் படையெழுச்சிகளும் நிகழ்ந்து வந்தமையாற் சிற்சிலபோது நமது தமிழ்மொழி வளர்ச்சி யடையாது தடைப்பட்டதுண்டு. போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் என்போரின் அதிகாரமும் ஆட்சியும் நம் நாட்டில் நிலைபெற்ற காலங்களில் நமது அருமைத் தமிழ் மாத்திரமன்றிச் சைவசமயமும் அளவுகடந்து மிக்க இன்னலையுஞ் சீர்கேட்டையும் அடைந்துவந்துள தென்பது சரித்திரங்கண்ட மறுக்கொணு வுண்மையா கும். இப் பரிதாப நிலையிலுங்கூட நல்லிசைப் புலமை வாய்ந்த கவிஞர்கள் தோன்றித் தமிழை ஓரளவுக்கு வளர்த்துவந்துள்ளார்கள்.

பின்னர் ஆங்கிலவரசினர் இலங்கையைக் கைப் பற்றியதும் (1796), தமிழ்மொழியும் சைவசமயமும் மறுபடி கலக்கமும் துயரும் நீங்கப்பெற்று வளர்ச்சி யடைய ஆரம்பித்தன. பத்தொன்பதாம் நூற்ருண்டி லும் இருபதாம் நூற்ருண்டின் முற்பகுதியிலும் விளங் கிய புலவர்களும், அவர்கள் மொழி சமயம் என்பன வற்றின் ஆக்கத்தின்பொருட்டுச் செய்த மாபெருந் தொண்டுகளும் பொதுவாக யாவரும் அறிந்தவை களே. இருபாலையில் வாழ்ந்த மகாவித்துவான் சேனுதிராச முதலியாரை முதற்கொண்டு அநேக தமிழ் அறிஞர்களை நமதுநாடுடைத்தாய் விளங்கிவந் துளது. இப்பெரியாரின் மாணவபரம்பரையினரே நாடெங்கணுந் தோன்றி நமது சமயத்தையும் மொழியை யும் மிக்கவூக்கத்துடன் வளர்த்துவந்தனரென்பாம். முதலியாரவர்களிடமும் அவர் மாணவர் நல்லூர் சரவணமுத்துப் புலவரிடமுங் கல்வி கற்றுத் தேறியவர்தான் ஆறுமுகநாவலர் பெருமான் என்ப

## பிறப்பும் கல்வியும்

இம் மகாவித்துவான் சேனாதிராசா முதலியாரின் தௌகித்திரன் (மகளது புத்திரன்) கந்தப்பொடியர் என்பவர்தான் தென்கோவை ச. கந்தையாபிள்ளையின் தாயாராகும் காமாட்சியம்மையாரின் தந்தையார். இருபாலையையடுத்த கோவைநகரென விளங்கும் கோப்பாய் உயர் குடிப் பெருமக்களும் அதிகாரபுருடர்களும் பல்கப்பெற்றவூராகும். நல்வளமும் பெருமையுமுடைய இவ்வூரின்கண்ணே பண்டிதரவர்கள், திரு. சபாபதிப் பிள்ளைக்கும் காமாட்சியம்மையார்க்கும் புத்திரனாய் 1880ஆம் ஆண்டு ஆனிமாதம் பிறந்துள்ளார்கள். பண்டிதரவர்கள் உரியகாலத்தில் வித்தியாரம்பஞ் செய்விக்கப்பெற்றுத் தமிழ்மொழியை நல்லாசிரியரிடஞ் சென்று கற்பாராயினர். சிறுவயசினராயிருக்கும்போது இவருக்கு நற்றமிழ் பயிற்றியவர்கள் தென்கோவை திரு. சின்னப்பாபிள்ளையும் 'உதயபானு'ப் பத்திராதிபர் திரு. சு. சரவணமுத்துப் புலவருமாவர். புலவரவர்களிடம் நன்னூல், சின்னூல் முதலிய இலக்கணங்களையும், மறைசையந்தாதி, கல்வளையந்தாதி, நைடதம், பாரதம் முதலிய இலக்கியங்களையும் கற்றுவந்தனர். தமிழ்மொழியைக் கற்பதுடனில்லாது அரசமொழியாகிய ஆங்கிலத்தையுங் கற்க விரும்பி அதை ஆரம்பத்திற் கோப்பாயிலுள்ள ஸி. எம். எஸ். பாடசாலையிலும், பின்னர் சுண்டிக்குளியிலுள்ள பரி. ஜோவான் கல்லூரியிலும் சென்று பயின்றனர். அங்கு எட்டாம் வகுப்புப் பரீட்சையிற் சித்தியுமடைந்தனர். ஆங்கிலம் கற்றுவந்த காலத்தும் தமிழை இவர் பராமுகஞ் செய்ததில்லை; சனி, ஞாயிறு வாரங்களிலும் மற்றும் ஓய்வு நாட்களிலும் சரவணமுத்துப் புலவரிடஞ் சென்று கற்று வருவாராயினர். தமிழ்மொழியில் மிக்க ஆர்வமும் பேரவாவுங் கொண்டிருந்தமையால் இவருக்கு

ஆங்கிலக் கல்வியில் அதிகம் நாட்டஞ் செல்லவில்லை. ஆகவே அதனை நிறுத்திவிட்டுத் தமிழ் மொழியையே மேன்மேலுந் தொடர்ந்து ஆர்வத்துடன் கற்பாராயினர். அப்போது இவருக்கு வயது இருபதாயிற்று.

## மட்டக்களப்பில் வாழ்க்கை

பின்னர் கொழும்புமாநகர் சென்று சிலகாலம் வசித்து வந்தனர். அங்கு வசித்துவருங்காலத்தில், மட்டக்களப்புக் கச்சேரியில் பிரதம முதலியாரும், சிறந்த தமிழ்ப் பேரறிஞரும், வெள்ளியந் திருமலைக்கிழார் என்ற புனைபெயரை யுடையவரும், நல்லூர் சரவணமுத்துப் புலவர் வழித்தோன்றலுமாகிய திரு. சிற். கைலாயபிள்ளையவர்களின் அழைப்புக் கிணங்கிப் பண்டிதரவர்கள் மட்டக்களப்புக்குச் சென்றனர். அங்கு வாழ்ந்துவந்த காலத்திற் புதிதாகச் சில தமிழ் நூல்களை முதலியாரிடங் கற்குஞ் சந்தர்ப்பத்தைப் பெற்றனர். அக்காலத்தில் முதலியாரவர்கள் நன்முயற்சியால் அநேக சைவ வித்தியாசாலைகள் மட்டக்களப்பில் அமைக்கப்படலாயின. அவைகளில் ஒரு வித்தியாசாலையைத் தலைமை வகித்து நடத்தும் கடமை பண்டிதர் மேலாயது. வயதிற் குறைந்தவராயிருந்தும் பண்டிதரவர்கள் மாணவர்களுக்குக் கல்வி பயிற்றுவதில் விசேஷ அக்கறையும் வன்மையுங் காட்டி யாவரதும் பாராட்டினையும் பெற்றனர். அங்கு, கல்விகற்பிப்பதோடமையாது சைவசமயப் பிரசங்கங்கள், இலக்கியச் சொற்பொழிவுகள் என்பன இடைவிடாது நிகழ்த்தி வந்தனர். அங்கு வசிக்கும்போதுதான், சிறந்தமுறையில் அகவற்பா இயற்றும் வன்மையையும் அதைச் சந்தத்தோடு படிக்கும் வகையினையும் முதலியாரிடம் தாம் கற்றதாக இவர் கூறுவதுண்டு.

## யாழ்ப்பாணம் திரும்புதலும் உயர்ந்த கல்வி கற்றலும்

பண்டிதரவர்களின் விவேகத்தையும், ஞாபகசக்தியையும், தமிழ்க் கல்வியிலுள்ள நாட்டத்தையுங் கண்ட முதலியாரவர்கள், இவரைக் கல்வியில் உயர்நிலையடையச்செய்யவேண்டுமென்று கருதி, யாழ்ப்பாணஞ் சென்று தமிழை இன்னும் விசேஷமாகக் கற்கும்படியும், அதற்கேற்ற ஆசிரியர் சுன்னுகம் அ. குமாரசுவாமிப் புலவரே என்றுங் கூறியனுப்பினர். யாழ்ப்பாணம் திரும்பியதும் கோப்பாயிலுள்ள தமது இல்லத்தில் வசித்துக்கொண்டு மேற்படி புலவரிடஞ் சென்று கல்வி கற்பாராயினர். விவேகமும் கல்வியில் ஊக்கமுமுள்ள நன்மாணுக்கர்களுக்குக் கல்வி பயிற்றுவதில் இயல்பாகவே மிக்க சிரத்தையுடைய புலவரவர்கள், பண்டிதரின் தமிழார்வத்தை மெச்சி அவர்க்கு மிக்க அக்கறையுடன் கல்வி கற்பித்து வந்தனர். இக்காலத்தில் பண்டிதர் கல்வியிற் செலுத்திவந்த ஊக்கத்துக்கு எல்லையில்லை. அப்போது புலவரவர்கள் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் தலைமையாசிரியராகவிருந்தனர். சனி, ஞாயிறு வாரங்களிலும் மற்றும் விடுதலைநாட்களிலும் அநேக மாணவர்கள் வந்து புலவரவர்களின் இல்லத்திற் கல்வி பயில்வதுண்டு. அக்காலத்திற் பண்டிதருடன் கல்வி பயின்றவர்களிற் சிறப்பாகக் குறிப்பிடப் படக்கூடியவர் வித்துவசிரோமணி பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்கள். பண்டிதரவர்கள் புலவர்களிடத்தில் தொல்காப்பியம் அகப்பொருள் விளக்கம், தண்டியலங்காரம், கந்தபுராணம், இரகுவம்சம், தணிகைப்புராணம், இராமாயணம் முதலிய நூல்களை அதிசிரத்தையுடன் கற்பாராயினர். இவைகளன்றி தருக்கம் நியாய சாஸ்திரம் முதலியனவற்றையும் கற்றுவந்தனர். இல்லத்தில் மாத்திரமன்றி யாழ்ப்பாண நகர்

சென்று அங்கு புலவரவர்கள் ஆறுதலடையும் நேரங்களி லும் நூல்களிலே தமக்குள்ள சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவார். சாயங்காலத்தில் புலவரவர்கள் வீடு திரும்பும்போதும் அவருடன் மருதையினார்மடம்வரை யிற் கூடநடந்து சென்று சந்தேக விபரீதங்களைத் தெளிந்துகொண்டு தமது சொந்தவூராகும் கோவையம் பதிக்கு மீள்வர். தமது இல்லத்திலுங்கூட வாளாவிருக்க மாட்டார். கற்றனவற்றை மேன்மேலும் சிந்திப்பதி லும், தெளிவதிலும், ஞாபகப்படுத்திக்கொள்வதிலும் காலங்கழிப்பார்.

## விவாகமும் உத்தியோகமும்

இப்படியாகக் கற்றுவருங்காலத்தில் இவருக்கு வயதும் இருபத்தெட்டாயிற்று. இப்பொழுதே இவ ருக்கு விவாகமும் நிகழ்ந்தது. இவர் உறவினரும் கந்தரோடை வாசருமாகிய திரு. க. தியாகராசபிள்ளை யவர்களின் சிரேஷ்ட புத்திரியாகிய திருமதி செல்லம் மாளைத் தமது பெற்றோரின் விருப்பத்திற்கிணங்கத் திருமணஞ் செய்துகொண்டனர். கந்தரோடை, சுன்னா கத்துக்கு மிக அண்மையிலுள்ள கிராமமாதலின் இவர் தமது ஆசிரியரிடம் இலகுவிற் சென்று கல்வி விஷய மாகக் கலந்து அறிந்துகொள்வதற்கும் நல்ல சந்தர்ப் பம் ஏற்பட்டதெனலாம்.

இப்படியாக இவர் தமிழில் மிக்க புலமைபெற்று நூலாராய்ச்சியில் மிக்க ஊக்கத்துடன் காலங்கழித்து வருவாராயினர். அப்பொழுது கொழும்புமாநகரில் நடைபெற்றுவரும் ஆங்கில ஆசிரிய பயிற்சிக்கல்லூரி யில், தமிழாசிரியர்களைப் பயிற்றும் வகுப்புக்கள் நடத்த அரசினரால் ஒழுங்குகள் வகுக்கப்பட்டன. அப்போது பண்டிதர் அவர்களே அக்கல்லூரியின் தலைமைத் தமிழ்ப் பண்டிதராக நியமிக்கப்பட்டனர். வேறு

அநேக பண்டிதர்கள் இந்த அரிய பதவியைப் பெற முயன்றும் பயன்படவில்லை. சிறந்த தமிழ்ப்புலமையுடன் இவருக்கிருந்த ஆங்கிலவறிவும், சேர் பொன். அருணசலந்துரை, சிற். கைலாசபிள்ளை முதலியார் ஆதியோரளித்த நற்சாட்சிப் பத்திரங்களும் இப் பதவியை இவரடைதற்கு உசாத்துணையாயின. இக் கல்லூரியில் ஆசிரியராகவிருந்த காலத்தில் ஆசிரிய மாணவர்களுக்கு உயர்ந்த இலக்கிய இலக்கண நூல்களைப் பயிற்றிவந்தனர். அப்போது இவரிடங் கல்வி கற்றவர்களில் இருவர் நாமங்கள் விசேடமாகக் குறிப்பிடப்பட வேண்டியன. ஒருவர் பிற்காலத்தில் விபுலாநந்த அடிகளாக விளங்கிய பண்டிதர் சா. மயில்வாகனனர். மற்றையவர் சஹிராக் கல்லூரித் தமிழ்ப் பண்டிதராயிருந்த முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பியவர்கள். இவர்கள் தொடர்ந்து பண்டிதரிடம் தமிழ்க் கல்வியைக் கற்றுவந்ததுமன்றித் தமதாசிரியரிடம் என்றும் நன்றியறிதலுடையராகவும் இருந்தனர். பின்னையவராகும் திரு. நல்லதம்பியவர்கள், தாம் அரிதியற்றி அரசினரின் பரிசுபெற்ற மருதன் பந்தயக் கவிகளை (Marathan Songs) அச்சிட்டு நூலாக வெளியிட்டபோது,அதனைத் தமது தமிழாசிரியராம் பண்டிதர் அவர்களுக்கே அர்ப்பணஞ் செய்து கௌரவித்தமை அந்நூன்முகத்தை நோக்கின் அறியலாகும்.

## வேலை மாற்றமும் கல்வித் தொண்டும்

தொடர்ந்து பத்து வருடங்களுக்கு மேலாகக் கொழும்பு ஆசிரிய கல்லூரியில் நடத்தப்பட்டுவந்த தமிழாசிரிய மாணவர்க்குரிய வகுப்புக்களை அரசினர் நிற்பாட்டி, இதற்கென ஒரு தமிழாசிரிய கல்லூரியை யாழ்ப்பாணத்தில் நிறுவ முடிவுசெய்தனர். நிறுத்திய போதும், பண்டிதரவர்கள் சேவையை அரசினர் கைவிட விரும்பவில்லை. இவரை வித்தியாபகுதிக்

கந்தோரில் மொழிபெயர்ப்பாளராகவும், தமிழ்ப் பாட விதானங்கள் வகுப்பவராகவும், தமிழ்ப் பரீட்சகராக வும் இருக்கும்படி வைத்துக்கொண்டனர்.

இவ்வாறு கடமையாற்றிவருங் காலத்தில் மாண வர்களுக்கு ஏற்ற நூல்கள் எழுதவேண்டுமென ஊக்கங் கொண்டனர். இவர் விருப்பப்படியே குமாரசுவாமிப் புலவர் அவர்கள் 'இராமோதந்தம்' என்னும் செய்யுள் நூலையும், 'சிசுபாலசரிதம், இரகுவமிச சரிதாமிர்தம், இதோபதேசக் கதைகள்' என்னும் வசன நூல்களை யும் எழுதி அச்சிட்டு வெளியிட்டனர். வித்தியா பகுதிக் கந்தோரிற் கடமையாற்றுங் காலத்திற்றான் திரு. மு. திருவிளங்கம் அவர்கள் எழுதிவந்த சித் தாந்த சாஸ்திர நூலுரைகளுக்கும் இடைவிடாது சென்று உதவிபுரிந்துவந்தனர். மேலும் கொழும்பு விவேகாநந்த சபையினர் ஆதரவில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் வகுப்புக்களையும் இவரே நடத்திவந்தனர்.

## இளைப்பாறிச் சென்னை செல்லல்

இப்படியாக இருந்துவருங் காலத்தில் உடல் ஆரோக்கியம் குன்றுவதாயிற்று. இதற்கிடையில் இவ ரது தமிழாசிரியராகும் குமாரசுவாமிப் புலவரும் காலஞ்சென்றனர். தமது உத்தியோகத்தினின்று இளைப்பாற முடிவுசெய்து 1922ஆம் ஆண்டின் பிற் பகுதியில் அப்படியே செய்தனர். இந்தியா சென்று மேலும் தமிழாராய்ச்சி செய்யவேண்டும் என்னும்அவா இருந்தமையால் அங்கு செல்லல்வேண்டுமென முடிவு செய்து 1922ஆம் ஆண்டிற்றானே அங்கு சென்றனர். சென்னையை யடைந்து திரு. **C. V.** ஜம்புலிங்கம்பிள்ளை யுடன் வசித்துவந்தனர். இவர் நட்பும் தொடர்பும் இவர் தொண்டுகளுக்கு மிக உசாத்துணையாயின. சென்னைக் குச் செல்லச் சில மாசங்களுக்கு முன்னரே அங்கு

வாழ்ந்துவந்த தமிழ்ப் பேரறிஞர் திரு. த. கனகசுந்தரம் பிள்ளையவர்களும் காலஞ்சென்றனர். இப் பெரியாரின் நட்பினையும் துணையையும் பெற்றுத் தமிழாராய்ச்சியில் ஈடுபடக் கருதியிருந்த பண்டிதருக்கு இச் செய்தி மிக்க துக்கத்தை விளைத்தது. எனினும் திரு. கனகசுந்தரம் பிள்ளையவர்களின் புதல்வர்களான திரு. இராஜ ராஜன், இராஜசேகரன் முதலியோருடனும் சிறிது காலம் வாழ்ந்து அவர்களது நட்புரிமையைப் பெற்றனர். அப்போது திரு. கனகசுந்தரம்பிள்ளையின் வாழ்க்கை வரலாறொன் றெழுதி வெளியிட்டனர். அவர்மீது பண்டிதர் பாடிய இரங்கற் பாக்களும் அதிலேயே வெளிவந்தன. சென்னையில் வசிக்குங் காலத்தில் அநேக தமிழ்ப் பெரியார்களின் நட்பையும் பெற்றனர். க. நமசிவாய முதலியார், உ. வே. சாமிநாதையர், பண்டிதர் அநந்தராமையர், திரு. வி. கல்யாணசுந்தர முதலியார், சி. கந்தசாமி முதலியார் என்போருடன் இடைவிடாது தமிழ்க் கல்வி விஷயமாகக் கலந்துரை யாடும் சந்தர்ப்பம் இவர்க்குக் கிடைத்ததெனலாம்.

## பேரிய மனமாற்றம்

தமிழ்க் கல்வியில் மிக்க சிரத்தையும் நாட்டமுங் கொண்டிருந்தவராகும் பண்டிதரவர்களுக்கு இருந்தாற் போல் பெரியவொரு மனமாற்றம் ஏற்படுவதாயிற்று. கற்றனவு மினியமையும் என்று எண்ணி ஈசன் திருவடிப் பேற்றிலே சிந்தை சடக்கென்று சென்றது. சென்னையை விட்டு நீங்கித் திருக்கழுக்குன்றம் சென்று சில மாதங்கள் வசித்தனர். ஞானகுருவைக் காண வேண்டுமென்ற நாட்டம் மேலோங்கியது. சுவாமி தரிசனஞ் செய்வதும், மலைப்பிரதட்சணம் வருவதும், இடைவிடாது இறைவனைத் தியானிப்பதுமாகக் காலங் கழித்துவந்தனர். இவர் கோரிக்கை பயன்படாது போகவில்லை.

திருக்கழுக்குன்றத்தில் இவரிடம் தமிழ் பயின்று வந்த சிறுவனொருவன் இரண்டு நாட்கள் அடுத்தடுத்து ஒரு சொப்பனங் கண்டான். இப் பையனுக்கு வயது பன்னிரண்டிருக்கும். கழுக்குன்றத்துக் கோயில் அம்பாள் — கோகிலாம்பிகை — கனவில் தோன்றிப் புதுச்சேரிக்குப் போகும்படி தான் பல முறை சொல்லியும் இவர் போகவில்லையே யென்று குறை கூறியது. இச் சொப்பனத்தை மறுபடியுங் கண்டு அதனைத் தமது ஆசிரியராகிய பண்டிதர் அவர்களிடம் அச் சிறுவன் தெரிவித்தான். எனவே, குருதெரிசனம் அங்கு பெறலாமென்று எண்ணிப் புதுச்சேரிக்குப் புறப்பட்டனர்.

## புதுச்சேரியிற் குரு தேரிசனம்

புதுச்சேரியைச் சென்றடைந்ததும் தமது பெட்டி, படுக்கை முதலிவற்றை ஓரிடத்தில் வைத்துவிட்டுத் தாம் சாவகாசமாகத் தங்குவதற்கு ஏற்ற விடுதியெங்கே கிடைக்குமென அறிய வீதிவழியாகச் செல்வாராயினர். அங்கே அம்பலத்தாடுமையர் வீதியில் யாரோ ஒருவர் இவரைக் கண்டு அண்மையில் வந்து "தங்களுக்காக வெகு நாட்களாகக் காத்துக்கொண்டிருக்கிறேன்; உள்ளே வருக", என ஒரு வீட்டுக்குள் வரும்படி அழைக்கப் பண்டிதர் வியப்படைந்து அவருடன் அங்கு ஏகினர். இரண்டு மூன்று நாட்களாக இவருக்கு வேண்டிய உணவு பிராமணப் போசனசாலையிலிருந்து பெற்றுக் கொடுக்கப்பட்டது. நெய், பால், மோர், தயிர் என்பன தாராளமாக வழங்கப்பட்டன. அப்போதுதான் முத்தி — சிவத்தோடு சம்பந்தமுடைய — சைவசமய முத்திப் பண்பு இவருக்கு அறிவுறுத்தப்பட்டது. உடல் பிணமாக விழாது, ஊன்கெட்டு, உயிர்கெட்டு, உணர்வு கெட்டு, உள்ளமும் போய், தானுங் கெட்டுச் சோதியில் இரண்டறக் கலப்பதே — கட்டையில் வைத்துத்

தகனஞ் செய்யாமலும், கள்ளக் குழியிற் புதைபடாமலும் உடல் உயிரை ஓம்ப, உயிர் உடலை ஓம்ப — உடல் உயிர் ஒன்றுபட்டு — ஊனங்கரைந்து, என்புள்ளுருகி — இருவினையும் ஈடழிந்து, துன்பங் களைந்து, துவந்துவங்கள் தூய்மை பெற்று, அமுதமுது தன்னைப் பெற்றுப் பல்லோர் முன்னிலையில் — அதாவது இரகசியமாகவல்லாமல்—சோதியில் அள்ளூருக்கையுடன் கலந்து மறைவதே மீண்டு வாரா நெறி என்பது எடுத்து உரைக்கப்பட்டது.

போசனசாலையிற் பெற்ற உணவு உடம்புக்கு ஏற்காமையால் பண்டிதரவர்கள் சிறிதுகாலம் தாமாகவே சமைத்து உணவுகொண்டனர். பண்டைச் சைவ முத்தியின் மாண்பினை ஆராயப்புகுந்த பண்டிதரவர்களுக்குச் சமையல் வேலை சிலவாரங்களுள் அலுத்துக் கசப்படைந்தது. எனவே, முன்வீட்டில் வசித்துவந்த குடும்பத்தாரிடம் இவருக்குச் சுத்த போசனம் வழங்க ஒழுங்கு செய்யப்பட்டது. ஏறக்குறைய ஆறு மாதங்களுக்குமேல் தமக்குஏற்ற உணவு சமைத்தளித்துவந்த திரு. R. நாகரத்தினம் பிள்ளையவர்களின் குடும்பத்தாருக்குத் தாம் மிகவும் நன்றியுடையரெனப் பண்டிதர் அடிக்கடி கூறுவதுண்டு. திரு. நாகரத்தினம்பிள்ளையின் சகோதரி செல்வி மாரிமுத்தம்மையார்—வயது 10—முக்கியமாகப் பண்டிதரவர்களுக்கு வேண்டியவராயினர். இவ்வம்மையார் 16 - 3 - 32இல் இறந்தபோது இவர் உடம்பு சமாதி வைக்கப்பட்டது.

ஆறு மாதம் வரையில் புதுச்சேரியில் தன் செலவிலேயே தங்கியிருந்தனர். பின்னர் தமக்கு அரிய நண்பராக வந்தவரை – பல அரிய உண்மைகளை, நெய் விளக்கெனினும் சுடர்விட்டெரிய வேண்டிய தூண்டு கோல்போல் விளக்கிய நண்பரை—தன்னை ஈடேற்ற

வந்த குருவாகக் கண்டனர்; அவரின் திருவடிகளில் விழுந்து பாதங்களில் தன் தலைபட நமஸ்கரித்தனர். பின்பு சொப்பனத்தில் ஊருக்குச் செல்லும்படி உத்தரவு ஏற்பட்டமையால் தனது அரிய நண்பரின் சம்மதத்துடன் ஊர்வந்து தமது மனைவியாருடன் வாழ்ந்துவந்தனர். புதுச்சேரியில் இருக்கும்போதே 'வித்தகம்' என்ற பெயர்கொண்ட ஒரு வார வெளியீடு நடாத்தி அதில் உண்மைச் சைவ முத்தியைப் பற்றி விளக்கவேண்டுமென முடிவுசெய்திருந்தனர். அவ்வாறே யாழ்ப்பாணம் திரும்பிய பின் தமது ஆசான் சொற்படி 1934ஆம் ஆண்டு வரைக்கும் பல ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டுக் கட்டுரைகள் பல எழுதி ஆசானுக்குச் சமர்ப்பித்து அவரின் சம்மதத்தோடு 'வித்தகம்' என்னும் பத்திரிகையை வெளியிட்டு வந்தனர்.

## உண்மை முத்தியும் வித்தகப் பத்திரிகையும்

மேலும் இப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கிடையில் 'திருவாசக உண்மை', 'உண்மை முத்தி நிலையாராய்ச்சி' என்னும் சிறு நூல்களையும் அச்சுவாகன மேற்றினர். வித்தகம் மூன்று வருடங்களாக நடைபெற்றது. நந்திபெருமான் வெளித்தோன்றி என்பில் உயிரை வைத்து எழுப்பித்தருவார்—முற்காலத்தில் திருஞானசம்பந்தர் பூம்பாவையை என்பிலிருந்து எழுப்பிய விதம்—என்னும் விஷயமும் வருடந்தோறும் பங்குனித் திருவாதிரையில் நடைபெறும் மாரிமுத்தம்மையாரின் பூசையில் பண்டிதரவர்களாற் பாடப்பெற்ற மணக்குள விநாயகர் பதிகம், மாரிமுத்தம்மையார் பதிகம் என்பனவற்றிற் காணப்பட்டுள்ளது.

உண்மை முத்தியை அடையும் ஆன்மா தூல தேகத்தை அப்படியே விழவிட்டுச் செல்லாதென்றும்,

உடம்பு பொன்மயமடைந்து சோதிமயமாய்விடு மென்றும் இவர் தெளிவாக எடுத்துக்காட்டிவந்தனர். மணிவாசகப்பெருமான், சேந்தனூர், முத்துத்தாண்டவர், அறுபத்துமூவர் முதலிய மகான்கள் அடைந்த கடைசி நிலையை உதாரணமாக எடுத்துக்காட்டுவர். திருவாசகம், திருமந்திரம், தேவாரம் முதலிய அருட்பாக்களிலிருந்து தாம் கூறும் விஷயங்களுக்கு ஆதாரமுங் காட்டினர்.

உண்மை முத்தியின் தத்துவத்தை உலகறிய எடுத்துக்காட்டுவதற்கு இவர் ஆதாரமாகக்கொண்ட நூல்களில் குமாரதேவர் இயற்றிய சுத்த சாதகமும் ஒன்று. இந்நூலினை விளக்கத்துடன் இவர் பதிப்பித்து வெளிப்படுத்தியுள்ளார். இடைக்காட்டுச் சித்தர் அருளிய மூவடிமுப்பது என்னும் நூலுக்கும் ஔவையார் செய்த ஆத்திசூடி கொன்றைவேந்தன் என்னும் நூல்களிற் சில பாகங்களுக்கும் உரை யெழுதி வித்தகத்தில் வெளியிட்டதுண்டு.

## குருநாதன் சமாதி அடைதல்

1938ஆம் வருடம் ஆனி உத்திரத்தன்று பண்டிதரவர்களின் குருநாதனுகும் மகானும் சிவபதமடைந்தனர். அவர் உடலும் சமாதி வைக்கப்பட்டது. இச் சமாதி மாரிமுத்தம்மையார் சமாதிக்குப் பக்கத்திலேயுள்ளது. அதன்பின்னர் மாரிமுத்தம்மையாரின் மூத்த சகோதரி அம்புஜம்மாளும் தமது 35ஆவது வயதில் மறைந்தனர். இவருடலும் சமாதி வைக்கப்பட்டது.

இம் மூவரின் சமாதிகளையும் புதுச்சேரியிற் கடற்கரைக் கணித்தாகப் பாப்பம்மையார் கோவில் என்று கூறப்படும் இடத்தில் இன்றுங் காணலாம்.

பெரியாருக்கு உதவிசெய்த குடும்பத்தில் இப்போது சீவந்தரராயிருப்பவர்கள் திரு. R. நாகரத்தினம் பிள்ளையவர்களும் அவர் சகோதரன் திரு. R. வேலாயுதம்பிள்ளையும், அவர் தாயாருமே. தாயாருக்கு வயது 86 ஆகின்றது. திரு. நாகரத்தினம் அவர்களுக்கு வயது 60ஆகும்.

இவர்கள் எல்லோரும் வசித்துவந்த புதுச்சேரியிலுள்ள வீடு கடன்காரணமாக இற்றைக்கு நான்கு வருடங்களுக்கு முன் ஏலத்தில் விற்கப்பட்டது. உண்மை முத்தியைப்பற்றி ஆராய்ச்சி செய்பவர்கள் எல்லோரும் லௌகிகத்தில் அதிகம் பொருளுடையவர்கள் அல்ல. கஷ்டங்கள் நிறைந்தவர்கள். பாரமார்த்திகத்திலும் சமாதிவைக்கப்பட்டனர்; சிலர் தகனஞ் செய்யவும் பட்டனர்.

உடலும் உயிரும் இரண்டறவொன்றிச் சோதியிற் கலந்ததை 26 வருடங்களாகக் கண்டதில்லை. ‘ அவனன்றி ஓரணுவும் அசையாது ’ என்பது ஆன்றோர் வாக்காதலால் பண்டிதரவர்கள் உடல் தகிக்கப்பட்டதும், அவரின் குருநாதனுடையதும் அவரின் அடியார்களுடையதுமாகிய உடல்கள் சமாதிவைக்கப்பட்டதும் திருவருட் சம்மதமென்றே கொள்ளவேண்டுமன்றோ? “ செத்தேபோனுல் சிரியாரோ ” என்ற திருவாசக வாக்குக்கு இலக்காயினர்.

## ஆட்சேபங்களும் விடையும்

“ உண்மை முத்தி—அதாவது உடல் பிணமாகாது கற்பூர தீபம்போற் கனகசபையிற் சோதியில் இரண்டறக் கலக்கும் நிலைமை தங்களுக்கு முண்டாமோ? ” என்று பண்டிதரவர்களைக் கேட்டபோது, “ எனது ஆசானும் நானும் எங்களுக்கு அது நிச்சயங் கிடைக்குமென்று சொல்லவில்லையே! மீளா நெறி—பிறவி

யற்றுப்போகும் நெறி—உண்மை முத்தி இன்னதெனத் திருவருட்டுணை, சைவ சமய குரவர்கள், ஔவை, திருமூலர், வள்ளுவர், முத்துத்தாண்டவர் இன்னோரன்ன உண்மை முத்தியை யடைந்த உண்மைப் பெரியார்களின் அனுபவ வாக்குகளைக்கொண்டு விளக்கினதேயொழியச் ச. கந்தையாபிள்ளை, தென்கோவை கந்தையாபிள்ளை என்று அழைக்கப்படும் யான், அந்நிலையை அடைவேனென்று கூறவில்லையே" என்று வற்புறுத்துவர். "உலகம் உண்மையை அறியட்டும். நடிநொடி பாவனைகளால் உண்மை முத்தியை அடையலாம் என்பது வாய்ப்பேச்சே—சோம்பேறிகளின் பேச்சே. பெரியோர்கள் படாத பாடு பட்டுள்ளார்கள் அல்லவா? நாயினும் கடையேன் ஆகிய எனக்கும் உன்னத நிலையை அடைந்த பெரியோர்களுக்கும் இடையீடு சொல்லவோ அளக்கவோ முடியுமா? 'அழுதால் உன்னைப் பெறலாமே,' என்று மணிவாசகன் திருவாய் மலர்ந்தானே. உடல் உயிரில் உள்ள அழுக்கை இன்னதென அறிய முயலாமலிருக்கும் நாம்—ஆசான் அருளின்றி இருக்கும் யாம்—நீலிக்கண்ணீர் வடித்தோ, கடவுளே! கடவுளே!! என்று கூப்பாடு போட்டோ சத்துப்போய்ச் செத்துப்போனால், 'அவர் பதவி யடைந்துவிட்டார், ஒடுங்கிவிட்டார்' என்று கூறுவது உலகப் போலி வழக்கேயன்றி வேறு யாது?" எனக் கூறுவர்.

பண்டிதரவர்கள் தாம் சிவகதியடையச் சில மாதங்களுக்கு முன்னர் 'திருவாசக மணிகள்' என்ற தலையங்கத்துடன் அரிய உண்மைகளை விளக்குங் கட்டுரைகளை ஈழகேசரி வார இதழில் தொடர்ச்சியாக எழுதி வெளியிட்டுவந்தனர். எழுதப்பட்ட கட்டுரையின் பிற்பகுதி அப் பத்திரிகையில் ஏதோ காரணத்தால் இடம்

பெருதாயிற்று. அக் கட்டுரைப் பாகங்களெல்லாவற்றை யுந் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிடின் அது உண்மையை அறிய விரும்புவோருக்கு மிக்க பரோப காரமாகும்.

பண்டிதரவர்கள் தன் ஆசானின் பெயரை ஒரு காலத்திலும் வெளியிட்டவரல்லர். வித்தகத்தில் மறையினுள் மறையாய் ஆசான் பெயர் காணப்படும் என அவர் கூறுவர். ஆசானும் தன் பெயர் வெளி வரக் கூடாதென்று கேட்டுக்கொண்டமையாலும் பதி பசு என்ற ஒழுங்கின் பண்பின்படியும் ஆசான் பெயர் மறைபொருளாக இருக்கவேண்டியதாயிற்று.

## பாராட்டுகள் — நூல்கள்

பண்டிதரவர்கள் உண்மை முத்தியைக் குறித்தும் சித்தர்களைப்பற்றியும் காலத்துக்குக் காலம் எழுதி வெளியிட்ட நூல்களையுங் கட்டுரைகளையும் வாசித்த அநேகர் மிக்க வியப்படைந்து இவர் கொள்கைகளை ஆதரிப்பாராயினர். சிலர் இவர் கொள்கைகளை ஏற் காதவராய் மறுப்புரைகள் வெளியிட்டனர். அவைகளுக் கெல்லாம் ஆதாரத்துடன் தக்க பதில் கூறித் தமது மதத்தை நிலைநாட்டப் பண்டிதர் பின்னின்றாரில்லை. உண்மை முத்தி விஷயமாகப் புதிதாகத் தாம் எதனை யுங் கூறவில்லையென்றும், நீண்டகாலமாக மறைந் திருந்த உண்மைகளையே தாம் உலகமறிய வெளியிட்ட தாகவும் பண்டிதரவர்கள் கூறுவதுண்டு. இவரின் உண்மை முத்தி விளக்கங்களைக் கிரமமாக வாசித் துணர்ந்த, சித்தாந்தம், சோதிடம் முதலிய சாஸ்திரங் களில் மிக்க விற்பன்னராக விளங்கிய வேதாரணியம் டாக்டர் V. V. இரமணசாஸ்திரியார் M. A., P.hd. (ZOO) அவர்கள் பண்டிதருடன் நீடித்து இவ்விஷயமாகக் கடித மூலம் கலந்துகொள்வதுண்டு. பண்டிதரின் உண்மை

முத்தியைப்பற்றிய கொள்கைகளுக்கு மதிப்புக் கொடுத்து வந்தனர். இற்றைக்கு இருபது வருடங்களுக்கு முன்னர் இராமகிருஷ்ண மடத்தாரால் இராமகிருஷ்ண பரமஹம்சரின் நூற்றாண்டு வைபவ விழா கொண்டாடப்பட்டது. அப்போது அவரின் ஞாபகார்த்த வெளியீடாக, உலகின் பல நாடுகளிலும் இந்தியாவின் கண்ணும் வாழ்ந்த தத்துவசாஸ்திர விற்பன்னர்கள் பலரால், மிக்க ஆராய்வுடன் திறம்பட எழுதப்பட்ட கட்டுரைகள் அடங்கிய மூன்று பெரிய பிரசுரங்கள் **(Ramakrishna Centenary Volumes I, II, III)** வெளியிடப்பட்டன. அவைகளில் ஒன்றில் மேற்படி சாஸ்திரியாரவர்கள் உண்மை முத்தியைப்பற்றியும் சித்தர்களைப்பற்றியும் விளக்கும் நீண்டதோர் கட்டுரையைத் திறம்பட எழுதியுள்ளார். இவ்விஷயத்தைப்பற்றித் தாம் எழுதுவதற்கு மிக்க உறுதுணையாக விருந்தவர் தென்கோவை பண்டிதர் ச. கந்தையாபிள்ளையே என்றும், உண்மை முத்தியைப்பற்றிய நல்லவறிவும் அதனை எடுத்து விளக்கும் வன்மையும் நன்கு கைவரப்பெற்றவரும் அவரேயென்றும் அதிற் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

பண்டிதரவர்கள் தமிழ் மொழியில் மிக்க பாண்டித்திய முடையவராயிருந்தனராயினும் அரிய பெரிய பல நூல்களைப் புதிதாக எழுதி வெளியிட்டதில்லை; பழைய நூல்களுக்கு உரைவகுத்ததுமில்லை. சமயத் துறையில் சில சிறுநூல்களை வெளியிட்டிருக்கின்றார்கள். கொழும்பு மாநகரிலுள்ள வித்தியாகந்தோரிற் கடமையாற்றிய போது ஆங்கில மன்னரின் செனனதினக் கொண்டாட்டத்தை யொட்டி 'ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் இயன்மொழி வாழ்த்து' என்ற மகுடத்தில் அகவற்பாவில் யாத்து, பொருணயம் சொன்னயத்துடன் நல்லிசையும் கெம்பீரமுமுடையதாய் விளங்க, ஒரு நூல் வெளியிட்டுள்ளார். இந்நூலைப் பல புலவர்கள் பலபடப் புகழ்ந்து பாராட்டியதுண்டு. இவர் சிறந்த செய்

யுள்கள் இயற்றுவதில் வன்மை படைத்திருந்தது போல், வசனநூல்கள் கட்டுரைகள் வரைவதிலும் மிக்க சாமார்த்திய முடையவர். இவருடைய வசனங்கள் இறுகிய நடையும் விழுமிய கருத்தும் ஒழுகிய வோசையு முடையனவாயிருக்கும். இவர் கல்வி விஷயமாக எழுதிய பல கட்டுரைகள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்று வெளிவரும் 'செந்தமிழ்' என்னும் பத்திரிகையில் வெளிவந்துள்ளன.

தணிகைப் புராணத்துக்கு ஓர் உரை யெழுதும்படி, இவரது ஆசிரியர் குமாரசுவாமிப்புலவர் அவர்களின் விருப்பப்படி, இற்றைக்கு நாற்பது வருடங்களுக்கு முன் இவர் ஆரம்பித்த வேலையும் முற்றுப் பெறவில்லை. சீவகசிந்தாமணிக்கு எதிர்க்காப்பியமாக எழுந்த இப்புராணத்துக்கு இங்கு உரைகூறும் ஆற்றலையுடையவரா யிருந்தவர் பண்டிதர் ஒருவரே. ஆகவே, காடின்னிய நடையில் இயற்றப்பெற்ற இந்நூல் வாளா கிடக்கவேண்டியதாயிற்று. கொழும்பு முதலியார் குல. சபாநாதனவர்கள் வேண்டுகோளின்படி மேலைக்கரம்பன் முருகப்பெருமான் மீது ஒரு பதிகம் பாடியுள்ளார். வேறுசில ஊஞ்சல் நூல்களும் இவர் இயற்றியதுண்டு. சேனாதிராச முதலியார் இயற்றிய 'நல்லை வெண்பா' என்னும் நூல், புலோலி பண்டிதர் திரு. க. முருகேசபிள்ளையின் உரைக்குறிப்புக்களுடன் 1942ஆம் வருடம் வெளியிடப்பட்டமைக்கும் இவரின் முயற்சியே காரணமாகும். வேறு அநேகர் இயற்றிய நூல்களுக்குச் சாற்றுகவிகளும் மதிப்புரைகளும் இவர் அளித்துள்ளார்.

## கடைசிக் காலம்

இவர் உண்மைமுத்தி விஷயமாக எழுதிவந்த விளக்கவுரைகளை வாசித்துணர்ந்தோர் சிலர் இவரையடைந்து மேலும் மேலும் இவரிடம் சமயவிஷயமாகப்

பல உண்மைகளைக் கற்றுவந்தனர்; இவரைப் போற்றித் தமது சந்தேகங்களைத் தெளிந்துங் கொண்டனர். அவர்களுள் இருவரை விசேடமாக இங்கு குறிப்பிடலாம். ஒருவர் இலங்கை யரசாங்க வித்தியா பகுதிக் கணக்குப் பதிவுத் தலைவராக விருந்து இளைப்பாறிய திரு. ஜி. இராசதுரை **B. A. (Lond) A. C. A,** அவர்கள்; மற்றையவர் தபால் நிலைய அதிகாரியாகக் கடமையாற்றிவரும் சுன்னாகம் திரு. சு. சண்முகமவர்கள். பண்டிதரவர்களுடன் நெருங்கி ஊடாடிவந்தமையால் அவர்களின் சமயக் கொள்கைகள் மற்றைய வரலாறுகள் என்பனவற்றை இவர்கள் சிறப்பாக அறியும் பேறுடையராகவுள்ளார்கள்.

இப்படியாக வாழ்ந்து வந்த பண்டிதரின் கடைசிக் காலம் சாமானியமானதன்று. நோய்வாய்ப்பட்டு மிக்க சிரமத்தை யடைந்தாராயினும் சமய விஷயமாகத் தமது இயம நியமங்களைக் கைவிட்டாரில்லை. தியானங்கள், ஓமங்கள், பூசைகள் என்பன நிகழ்ந்து கொண்டே வந்தன. இடைக்கிடை பத்திரிகைகளுக்கும் உண்மைமுத்தி விஷயமாக அவசியந் தேவைப்படும் கட்டுரைகளும் எழுதிவந்தனர். மொழி விஷயமாகவும் சமய விஷயமாகவும் இவரிடம் வந்து சந்தேகந் தெளிந்துகொண்டவரும் பலருளர்.

இவருடைய அன்புக்கும் ஆசிக்கும் இறுதிவரையில் உறைவிடமாயிருந்தவர் இவருடைய பெருமகளாகிய ஸ்ரீமதி ந. விசாலாட்சியம்மையாராவர். இவரே இவர்க்கு வேண்டிய வேண்டிய போதெல்லாம் ஏற்ற உணவும் வேறு உதவிகளும் குறைவின்றி யளித்துப் பல வழியிலும் இவரைப் பாதுகாத்து வந்தவராவர். கடைசிவரையும் இவ்வம்மையாரை இவர் மறவாது நன்றியுடன் வாழ்ந்து வந்தனர். பண்டிதரின் வாழ்க்கைத் துணைவியார் பல்லாண்டுகளுக்கு முன்னரே காலஞ்

சென்றுவிட்டனர். பண்டிதருக்கு ஒரு சகோதரனும் ஒரு சகோதரியு முண்டு. சகோதரியார் சில வருடங்களுக்குமுன் இறந்துவிட்டனர். சகோதரர் திரு. ச. வேலுப்பிள்ளை அவர்கள் மலாயாவில் உத்தியோகம் வகித்து இப்போது இளைப்பாறியுள்ளார். இவர் சுன்னுகத்தில் தமது உறவினருக்குள் மணம் புரிந்து குடும்ப சகிதராய் வாழ்ந்து வருகின்றனர். சென்ற பத்து வருடங்களுக்கு மேலாக இவரும் பண்டிதரவர்களுக்கு உறுதுணையாக விருந்து செய்துவந்த உதவிகள் பல. பண்டிதரின் மைத்துனர் திரு. தி. சிவகுருநாதன் அவர்களும் இவருடன் வாழ்ந்து பலவழியிலும் மிக்க உபகாரராயிருந்துவந்தனர்.

சிவகதியடைய மூன்று நாட்களுக்கு முன்னர்தான் பண்டிதரிற் சில புதிய மாற்றங்கள் தென்பட்டன. முகம் பிரபையடைந்து மிகத் தெளிவாகத் தோற்றியது. தியானத்திலேயே மனஞ் சென்றது. தமது அந்தியகாலம் வந்துவிட்டதை யுணர்ந்து மற்றையோர்க்குக் குறிப்பால் தெரிவித்தனர். உணவு முதலியவற்றை நாடவில்லை. 18 – 11 – 58 செவ்வாய்க்கிழமை காலை இல்லத்திலுள்ளவர்களையும் மற்றும் உறவினர் நண்பர்களையும் அழைத்து ஒவ்வொருவரிடமும் கைகூப்பி வணங்கி விடைபெற்றனர். ‘அறுபத்து மூவர் என்னை வந்தழைக்கின்றனர். நான் அவர்களுடன் செல்லப் போகின்றேன்’ என்று கூறிக் கைகூப்பி வணங்கினர். உடன் நின்றோரையும் கைகூப்பி வணங்கும்படி கூறினர். எல்லோரும் அப்படியே செய்தனர். பின் தாஞகவே கண்களை மூடித் தியானத்தில் சென்றனர். அவ்வளவுந்தான். எவ்வித கஷ்டமுமின்றி ஆன்மா அன்று காலை 10 மணியளவிற் சிவகதி பெற்றுச் சாந்தியடைந்தது. அவர் விருப்பப்படி அவருடல் தகனஞ் செய்யப்பட்டது.

" வித்தகம் " பத்திராதிபர்

தென்கோவை

# பண்டிதர் ச. கந்தையாபிள்ளை

அவர்களின் பேரில்

# நினைவுப் பாமாலை

**திரு. கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை, B, A.**

இயற்றியது

## நேரிசை வெண்பா

*சீர்விளம்பி கார்த்திகைசேர் செவ்வாய்முன் றட்டமியிற்*
*பார்புகழுங் கந்தைய பண்டிதன்காண் — ஏர்திகழும்*
*மண்ணுலகை விட்டேகி மாநிலத்தோர் போற்றிசெயும்*
*விண்ணுலகுஞ் சென்றன் விரும்பி.* 1

*கற்றவர் போற்றுங் கலாநிதியாங் கந்தைய*
*விற்பன்னன் விண்ணுலகம் புக்கனனே — நற்றமிழின்*
*பண்புகளை நன்று பகர்ந்திடவே வேறுநல்*
*நண்பரு முண்டோ நவில்.* 2

*பூவார் சிவபூசை பொற்புற வேசெய்து*
*நாவாரத் தோத்திரஞ்செய் நாவலனும் — ஓவாது*
*முத்திநெறித் தத்துவத்தின் முக்கியத்தைச் சொன்னவன்*
*உத்தமக்கந் தையனும் ஓது.* 3

செந்தமிழும் ஆங்கிலமுஞ் செப்பரிய சங்கதமும்
பந்தமறக் கற்றறிந்த பண்டிதனும் — கந்தைய
தேசிகனைப் போற்றமிழ்த் திரமுறு தொண்டர்கள்
காசினியில் உண்டாமோ காண். 4

என்கவிதை யைக்கேட்டு எந்நாளும் இன்புறூஉந்
தென்கோவைக் கந்தைய தேசிகா — என்னைக்
கவிபாடச் சொன்னாய் கவிவருமுன் னேநீ
புவிவிட்ட தேனோ புகல். 5

## ஆசிரியப்பா

புண்ணியம் ஒருங்கே நண்ணிய ஈழ
மண்டலம் அதனில் ஒண்தல மாம்யாழ்ப்
பாணம் என்னும் மாணமர் நாட்டிற்
பல்வகை வளனும் மல்கிய கோவைப்
பதியினிற் புலவனாய் வதிந்த சேனாதி
ராய முதலியின் தூய மரபினைக்
கிளத்த உதித்த களங்கமில் பண்டிதன்
உமாபதிக் கன்பனுஞ் சபாபதி செய்தவம்
பிறங்க உதித்த அறங்கிளர் புதல்வன்
ஆரியம் ஆங்கிலம் அளவினிற் கற்றுச்
செந்தமிழ்க் கடலின் அந்தமில் கரையைக்
காணுவான் வேண்டி மாணுறும் அறிஞனும்
சுன்னைசேர் குமார சுவாமிப் புலவனை
அண்டியே புலமிகு பண்டித னாகிக்
கொழும்புமா நகரில் விளங்கும்அர சாங்கப்
பயிற்சிக்கல் லூரியிற் பயிற்றுமா சிரியனாய்ப்
பல்லாண்டு சேவை பண்புறச் செய்து
நோயுற் றேஉடல் நொந்த காலை
சேவையி னின்றும் ஓய்வு பெற்றுச்
சின்னாள் வாழ்வை உன்னி நொந்து

பிறவியாம் பாசப் பிணக்கினை ஒழிக்க
மூர்த்தியுங் கோயிலுந் தீர்த்தமுந் துறையுந்
தன்னகங் கொள்தமிழ்ப் பொன்னா டெய்திச்
சேதுரா மேசுரம் சிதம்பரஞ் செந்தூர்
காஞ்சி மயிலை கழுக்குன்று மடவளாகம்
ஆதியாந் தலங்களிற் கோதிலாத் தவத்தால்
வேத புரியெனும் புதுவைமா நகர்வதி
நந்தியின் அருள்பெறு சுந்தரக் குரவனை
விதிவசம் தூண்டக் கதியென அடைந்து
பவநிலை நீங்கித் தவநிலை பெற்றுச்
சத்திய நெறியும் முத்தி நிலையுஞ்
சாதல் உண்மை ஆதல் இல்லை
உடலொடு மறைதலே உண்மை முத்தி
என்னும் உண்மைகள் துன்னப் பெற்று
அவற்றை விளக்க நவமுறு வித்தகப்
பெயரிய பத்திரம் நயமுறத் தொடங்கித்
திட்டமுறு கட்டுரைகள் இட்டமுடன் வரைந்து
பீடும் பெட்புங் கூடியே நின்றேன்
கந்தையன் என்னுங் கவின்பெறு புலவன்
விளம்பி கார்த்திகை விளங்கு செவ்வாய்
மூன்றுசேர் அட்டமி தோன்று திதியில்
புவியோர் ஏங்கத் திவிஎய் தினனே. 6

## அறுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

நந்திபிரான் கருணையினால் நவின்றபெரும்
உண்மையெலாம் நலமாய்க் கேட்டுப்
புந்தியினில் வைத்துவக்கும் புதுவையெனும்
பதிக்குரவன் புனித பாதம்
வந்தனைசெய் கந்தைய வரதன்றான்
வையகத்தை விட்டு நீங்கி
விந்தையுடன் மறைந்துபோய் விண்ணுறுநற்
கதியினுக்கே விரைந்தான் மாதோ. 7

## பன்னிருசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

பூந்தண் மலர்சேர் தென்கோவைப்
புனித நகர்செய் தவத்தாலே
புகழ்சேர் குணங்கொள் சபாபதிதன்
பிறங்கு தவத்தால் நன்மகனாய்
வேந்தர் பணியிற் பலகாலம்
விளங்கு முபாத்தி யாயனுமாய்
வித்தை பலவும் நந்தியிடம்
வினவுந் தமிழ்மெய் ஞானியுமாய்ச்
சாந்த குணங்கள் ஒருசேரத்
தருமம் மிகுந்த சிந்தையுடன்
தமிழ்மா மறையின் முத்தியுண்மை
தகுதி பெறவே எடுத்துரைத்தோன்
பாந்தள் அணியும் பரமனையே
பரவும் புதுவைக் குரவனடி
பணியும் புகழோன் கந்தையன்
பரம பதத்தை அடைந்தனனே. 8

## கட்டளைக் கலிப்பா

முந்து கந்தரோ டைப்பதி செய்தவம்
மூத்த விச்சுவ நாதனின் பேர்த்தியைப்
பந்த மின்றியே நன்மணஞ் செய்தனன்
பண்பு மிக்கவவ் வூரிடை தங்கியே
சந்த மிக்குறு செந்தமிழ்ப் பாக்களைச்
சகத்திற் கேவிருந் தாயளித் தானவன்
கந்த வேளடி ஏத்திடும் பண்டிதன்
கந்தை யாவுயிர் நீத்தனன் பாரிலே. 9

## கொச்சகக் கலிப்பா

அருமறையின் முதற்பொருளை
அறிவுறுத்த மனங்கொண்டு
பொருள்நிறைந்த தெருட்கவிகள்
பெருமையுடன் புகன்றனையே
திருநிறைந்த வித்தகத்தில்
திகழ்ந்திடுமுன் கட்டுரைகள்
உருமறைந்த உன்புகழை
உலகதனிற் புகட்டிடுமே. 10

## கட்டளைக் கலித்துறை

புண்ணியம் பொங்கு சபாபதி பெற்ற
புகழ்ப்புதல்வன்
எண்ணிய பல்கலை யாவையுந் தேரும்
இயற்புலவன்
நண்ணிய மாணவர் நம்பி வழிபடு
நற்குரவன்
கண்ணியன் கோவையிற் கந்தைய னென்னுங்
கவிமணியே. 11

சுன்னைக் குமார சுவாமிப் புலவனைச்
சூழ்ந்துகற்ற
கன்னற் கவிபுனை கோவைக்கந் தைய
கவிஞனுந்தண்
புன்னை வரதன் புகழ்சேர் கணேசப்
புலவனுமே
பொன்னுடு புக்கனர் அந்தோ புவிநலி
வுற்றதுவே. 12

காலையும் மாலையுங் கந்த னடிக்கம
லத்திநிற்பூ
மாலையுஞ் செந்தமிழ் மாலையுஞ் சூட்டி
வணங்கிடுவோன்

சோலையுஞ் சூழ்கந்த ரோடைக் கந்தைய
சுகுணனும்பல்
நூலையுந் தந்துயர் நோக்குட னேவிண்
நுழைந்தனனே. 13

வீட்டி லுளாரை விரைவில் அழைத்து
விநயமுடன்
காட்டும் அறுபத்து மூவர்தம் பூசனை
காண்பதற்கு
நாட்டம் உடையேன் விடைதருக என்று
நவின்றவுன்சீர்
பாட்டில் அடங்குந் த்கைத்தோ புலவர்கள்
பாடுதற்கே. 14

திவியிற் சிறந்தவன் தேவேந் திரன்நற்
சிறப்பொடுதேர்
சவியிற் சிறந்தவன் தர்மன்தன் தம்பி
சமுத்திர்ஞ்சூழ்
புவியிற் சிறந்தவன் சீராமன் தீஞ்சொற்
பொருள்பெறுமின்
கவியிற் சிறந்தவன் கந்தைய பண்டிதன்
காணுதிரே. 15

## கலிவிருத்தம்

நுண்மை நூலறி சூரவன் நவின்றிடும்
உண்மை முத்தியின் உயரிய சீலத்தைத்
திண்மை யாகவே திறம்படக் கூறினேன்
வண்மை மிக்குறும் கந்தைய வள்ளலே. 16

**வித்துவான் சி. ஆறுமுகம் அவர்கள்**

(ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

இயற்றியது

## ஆசிரிய விருத்தம்

புலவர்மலி தென்கோவைப் பண்டிதனெங்
கந்தையப் புனிதன் நாளும்
அலகிலழ(கு) ஒளிருதமிழ் அன்னைக்கோர்
நற்புதல்வ ஞகி வாழ்ந்தோன்
பலகலையும் மிக்கோங்கிப் பழகுதமிழ்
நிலையுயரப் பாடு பட்டோன்
நிலவுசிவ நெறிவளர நெஞ்சத்தில்
அஞ்செழுத்தை நிறுத்தி நின்றேன். 1

செந்தமிழ்த்தேன் மடுக்குங்கால் சேருவட
மொழிப்பாலும் பருகிச் சீர்சால்
அந்தமிலா ஆங்கிலநன் மதுவருந்தி
எழுந்துயர்ந்த அறிஞன் ஆகி
சந்ததமும் தமிழ்பரப்புந் தனித்தொண்டே
தன்கடனைத் தாங்கி என்றும்
சிந்தையுடன் பணிபுரிந்தோன் செப்பரிய
'வித்தக'த்தாற் சேவை செய்தோன். 2

அன்புநெறிச் சைவத்தில் ஆரியர்தங்
கரணங்கள் அதிகம் ஆதல்
தன்புனித உள்ளத்திற் ருங்காதே
சீர்திருத்தஞ் சாலச் செய்தோன்
இன்புறுநல் லடியார்கள் திருக்கதைகள்
எங்கெங்கும் இனிது கேட்டே
அன்பரெலாங் கூடியுண்டு அகமகிழப்
பெருஞ்சோறு அளித்த அண்ணல். 3

கல்வியினூற் களித்தோங்கு கந்தரோ
டைப்பதியிற் கலந்த அன்புச்
செல்விமணம் புரிந்தின்பம் சிறந்திலங்க
இல்லறத்தில் திகழ்ந்து நின்றோன்
சொல்லரிய புகழ்சாருங் கொழும்புநகர்
ஆசிரியப் பயிற்சிச் சூழல்
நல்லாசான் எனப்போற்ற நாடோறும்
தமிழூட்டி வளர்த்த நாதன். 4

திருநீறுஞ் சந்தனமுஞ் செம்பொடியுஞ்
சேர்ந்தநுதல் அழகு சொட்ட,
வருநூற்றுக் கணக்கான மாணவர்க்குத்
தமிழுரைத்த நாவும் பாட,
பெருமேற்றுக் கொடியுடையான் திருவடியார்
பெருங்கூட்டங் கண்கள் காண
அருளேற்றும் அம்மையப்பர் அடியிணைகள்
கந்தையவேள் அடைந்தார் அன்றே. 5

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY.
TIRUVANMIYUR :: MADRAS-41.

சுன்னாகம் :
திருமகள் அழுத்தகம்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY.
TIRUVANMIYUR :: MADRAS-41.

280